# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

## C.C. No. 159/2020

## வழக்கு சாட்சி – அ.சா. 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தனசேகரன் | ஜாதி | |
| தந்தை பெயர் | அழகர்சாமி | தொழில் | முன்னாள் இராணுவம் |
| கிராமம் | பிசிபட்டி | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | <u>தேனி</u> | வயது | 57/25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.04.2025.

**( எதிரி ஆஜர். எதிரி தரப்பு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>PW1 மனுவின் பேரில் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

இந்த வழக்கு தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் நீதிமன்ற முதல் விசாரணையில் அன்ன லட்சுமி உணவகத்தில் வேலை பார்த்தவர் சம்பவம் குறித்து எனக்கு தொலைபேசியில் அவர் தகவல் சொல்ல, அப்போது நான் தேனி பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள கடைக்கு சென்ற கொண்டிருந்தேன். உடனே நான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்று புகாரிலும், போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன். நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது நேரம் சுமாராக 9.30 மணி இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்பாக போலிசார் அங்கு யாரும் இல்லை. நான் மட்டுமே சம்பவ இடத்திற்கு போனேன். பின்னர் ஆம்புலன்ஸ் மூலமாக நான் மருத்துவமனைக்கு சென்றேன். ஆம்புலன்ஸுடன் எனது அண்ணனின் மைத்துனர் வெங்கடேசன் வந்தார். நான் சம்பவ இடத்திற்கு போவதற்கு முன்பாகவே வெங்கடேசன் சம்பவ இடத்தில் இருந்தார். பணி மருத்துவர் பரிசோதித்துவிட்டுதான் ராஜசேனாதிபதி

இறந்துவிட்டார் என்ற செய்தியை வெங்கடேசன் என்பவர் எனக்கு தகவல் தெரிவித்தார். சம்பவ இடத்தில் நடுவில் உள்ள தடுப்பு சுவர் சுமார் 4 அடி உயரம் இருந்தது. சம்பவ இடத்தில் பேரிக்கார்டு இல்லை. சம்பவ இடத்தின் இரண்டு ரோட்டிலும் வேகத்தடை உள்ளது என்றால் அதை நான் கவனிக்கவில்லை. அந்த சம்பவம் நடந்த சாலை சென்னை, திண்டுக்கல், பெரியகுளம் ஆகிய ஊர்களுக்கு செல்லும் பிரதான சாலை என்றால் சரிதான். மெயின் ரோட்டில் இருந்து 20 அடி போஸ்ட் ஆபிஸ் ஓடைத்தெருவை நோக்கித்தான் எனது சகோதரர் சென்றார் என்று நான் கேள்விப்பட்டேன். பாதசாரிகள் பயன்படுத்துவதற்காக சம்பவ இடத்தில் இடைவெளி உள்ளது என்றால் சரிதான். பழைய பேருந்து நிலையத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு வரவேண்டும் என்றால் தேனி காவல் நிலையத்தை கடந்துதான் செல்லவேண்டும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து தேனி காவல் நிலையம் சுமார் 100 அடி தூரம் உள்ளது என்றால் சரிதான். இறந்துபோனவர் தான் வாகன விதிகளை மீறி கவனக்குறைவாக விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. பிரதான சாலையை விட போஸ்ட் ஆபிஸ் ஓடைத்தெரு செல்லும் ரோடு அரை அடி உயராமாக உள்ளது. நான் சொன்னதுபோல் சொன்ன தேதியில் சம்பவம் பற்றி தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. உண்மையான புகார் மறைக்கப்பட்டு பின்னிட்டு வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணம் எனது சகோதரரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல.